மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.43/2022</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 10ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோமதி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.10.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அணைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக் கொண்டதன் பெயரில் தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு விவரங்கள் மற்றும் சாட்சியம் அளிக்க வேண்டிய விவரங்கள் குறித்து வாதி தான் எனக்கு சொன்னார் என்றால் சரிதான். தாவா சொத்து மொத்தம் எத்தனை ஏக்கர் என்றால் 1 ஏக்கர் 40 சென்ட். தாவா சொத்தின் காலை எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. சொத்தை கிரயம் பெற்றபோது அளந்து பார்த்து வாங்கினேன் என்றால் ஆமாம். தாவா சொத்து எங்களுக்கு கிரயம் கொடுத்த நபர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

எங்களுக்கு கிரயம் கொடுப்பதற்கு முன் அந்த சொத்தில் எங்கள் கிரய முன்னோர்கள் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை. தாவா சொத்தை நாங்கள் கிரயம் பெற்ற பிறகு அளவீடு செய்து பஞ்சாயத்தில் அனுமதி பெற்று சைட்டுகளாக பிரித்தோம் என்பதை பொறுத்து ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பார்கள்.

3. விவசாய நிலத்தை வீட்டுமனையாக பிரிக்க வேண்டும் என்றால் அரசிடம் அனுமதி பெற வேண்டும் அந்த அனுமதியை நான் வாங்கி உள்ளேனா என்றால் அனுமதி பெற்று தான் வீட்டுமனைகளை பிரித்து விட்டு உள்ளேன். விவசாய நிலத்தை வீட்டு மனைகளாக நான் பிரித்தது சம்பந்தமாக அரசிடம் பெற்ற அனுமதியை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. நான் நிலத்தை கிரயம் பெற்றபோது அதற்கு தென்புறத்தில் உள்ள கிணற்றிலிருந்து அதன் நிலத்திற்கு பாசனம் செய்யப்பட்டு வந்தது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை.

4. எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் கிரயம் கொடுப்பதற்கு முன் அந்த பூமியில் என்ன செய்து வந்தார்கள் என்றால் அது சும்மா தான் கிடந்தது. நான் கிரயம் பெற்ற பூமிக்கு வடமேற்கில் பி ஏ பி வாய்க்கால் மதகு இருந்ததா என்றால் நான் கிரயம் பெற்றபோது அது இல்லை அதை தற்சமயம் போட்டு உள்ளார்கள். நான் கிரயம் பெற்ற காலத்திலேயே பிஏபி வாய்க்கால் ஆயக்கட்டிற்கு கட்டுப்பட்டு இருந்து அதில் மதகும் அமைத்திருந்தார்கள் என்றும் தற்போது வழக்கிற்காக அதை மறைத்து

நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5. நான் கிரயம் பெற்றபோது கிரைய சொத்திற்கு உண்டான மூல பத்திரங்களை வாங்கி பார்வையிட்டேனா என்றால் ஆமாம். அந்த மூலப் பத்திரத்தில் தற்போது வாய்க்கால் இருந்த இடத்திலேயே கிணற்றிலிருந்து பைப் லைன் மற்றும் வாய்க்கால் மூலமாக பாசனம் செய்து கொள்ள பத்திரம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவும் இல்லை. எனது கிரைய சொத்தின் மூல பத்திரங்களிலேயே வாய்க்கால் மற்றும் பைப்லைன் உரிமை குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றும் தற்போது அவ்வாறு எதுவும் இல்லை என நான் வழக்கிற்காக மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6. 1974 ல் பிஏபி வாய்க்கால் அமைப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்து பிஏபி வாய்க்கால் அமைத்து பாசன வசதி அனைவருக்கும் கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது தற்போது ரோட்டிற்கு கிழபுறமாக தாவா பூமியின் மேற்கு கோட்டில் வடபுறம் பிஏபி வாய்க்கால் மதகிலிருந்து தென்வடலாக வாய்க்கால் அமைத்து பிரதிவாதிகள் பாசனம் செய்து வருகிறார்கள் என்றால் அதை தற்போது தான் அமைத்துள்ளார்கள் வடபுறத்தில் உள்ள பிஏபி வாய்க்கால் மதகிற்கு அதற்கும் வடபுறம் உள்ள மூன்றாம் நபருக்கு பாத்தியப்பட்ட பூமியில் செல்லும் வாய்க்காலில் இருந்து கிளை வாய்க்கால் பிரிந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. நாளது தேதி வரை மேற்படி வாய்க்கால்கள் மூலமாக தான் கிணற்றில் இருந்தும் பிஏபி மதகிலிருந்தும், பிரதிவாதிகள் தங்கள் பூமிகளுக்கு நீர் பாசனம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற பூமியில் அந்த மாதிரி எந்த அமைப்பும் இல்லை. தற்போது வாதியின் இடத்திற்கு மேற்புறமாக அவர்கள் தடத்திற்கு எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் பிரதிவாதிகள் நிலத்திற்கு அடியில் குழாய் பதித்து தங்கள் பூமிக்கு நீர் பாசனம் செய்து வருகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வாதிக்கு எந்த இடையூறும் இல்லாமல் தங்கள் பூமிக்கு நிலத்திற்கு அடியில் பைப் போட்டும் வாய்க்கால் மூலமாகவும் தண்ணீர் கொண்டு சென்று பாசனம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

8. நான் வாதி சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் தற்போது வாய்க்காலே இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் சொன்னார்கள் எனக்கு நேரில் தெரியாது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் என்ன சொல்லி உள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

9. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள பூஸ்துதி அமைப்புகளுக்கு எதிராக நான் வாதி சொல்லி கொடுத்ததன்

அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.10 18:45:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்